D.T. NEXT
Dated: 04.04.2025

# Representation by individuals to EC: EPS moves court

**CHENNAI: AIADMK general secretary Edappadi K Palaniswami moved a petition before the Madras High Court seeking to direct the Election Commission of India to decide the preliminary issues of the representations made by several individuals against the party by complying with the court's condition.**

EPS submitted that a division bench issued an order on February 12, directing the poll body to decide the representations made against AIADMK within the limitation of the four corners of para 15 of the Election Symbol Order, 1969, (stipulating that the commission should act only if it is satisfied that there are two rival groups are before it and claiming the party), within four weeks.

However, the commission failed to do so as directed by the court and had wanted to look into all the representations made before it with respect to the internal affairs of his political party, he alleged. It has been seven weeks without any decision made by the poll body, despite the court clearly stating the four-week timeline to dispose of the matter, said EPS. He added that with Assembly polls scheduled soon, the pending representation may cause harm to the party's image and lead to false propaganda. Hence, EPS sought HC to direct the poll body to dispose of the representations within a fixed date.

THE HINDU - TAMIL

Dated: 04.04.2025

அதிமுக உள்கட்சி விவகாரம், இரட்டை இலை சின்னம் தொடர்பான

# தேர்தல் ஆணையத்தின் விசாரணையை துரிதப்படுத்த காலக்கெடு நிர்ணயம் செய்யக்கோரி பழனிசாமி மனு தாக்கல்

■ சென்னை

அதிமுக உள்கட்சி விவகாரம் மற்றும் இரட்டை இலை சின்னம் தொடர்பான தேர்தல் ஆணையத்தின் விசாரணையை துரிதப்படுத்தும் வகையில் காலக்கெடுவை நிர்ணயம் செய்யக்கோரி அதிமுக பொதுச் செயலாளரான பழனிசாமி தரப்பில் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதிமுக உள்கட்சி விவகாரம் தொடர்பாக நீதிமன்றங்களில் தொடரப்பட்டுள்ள உரிமையியல் வழக்குகளில் இறுதி முடிவு காணப்படும் வரை இரட்டை இலை சின்னத்தை முடக்கி வைக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக்கோரி திண்டுக்கல்லைச் சேர்ந்த சூரியமூர்த்தி என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் ஏற்கெனவே வழக்கு தொடர்ந்திருந்தார்.

அந்த வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம் கடந்த டிச.4-ம் தேதியன்று, 'சூரியமூர்த்தியின் மனு மீது தேர்தல் ஆணையம் 4 வாரங்களில் முடிவெடுக்க வேண்டும் என்றும், அப்போது அதிமுக உள்கட்சி விவகாரம் மற்றும் இரட்டை இலை சின்னம் தொடர்பாக வழக்கு தொடர்ந்துள்ள அனைவரது கருத்துக்களையும் கேட்டு ஒரு முடிவுக்கு வர வேண்டும்' என உத்தரவிட்டிருந்தது.

### 6 பேர் மனு தாக்கல்

இந்நிலையில் அதிமுக உள்கட்சி விவகாரம் தொடர்பாக தேர்தல் ஆணையத்தில் அளிக்கப்பட்டுள்ள மனுக்கள் மீது எந்த விசாரணையும் மேற்கொள்ளக்கூடாது என தடை விதிக்கக்கோரி அதிமுக பொதுச் செயலாளரும், முன்னாள் முதல்வருமான பழனிசாமி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், தேர்தல் ஆணைய விசாரணைக்கு தடை விதித்தது. இந்நிலையில் இந்த தடையை நீக்கக்கோரி முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தின் மகனும் முன்னாள் எம்பி-யுமான ரவீந்திரநாத், பெங்களூரு வா. புகழேந்தி, கே.சி.பழனிச்சாமி உள்ளிட்ட 6 பேர் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

### மனு தள்ளுபடி

இந்த மனுக்களை விசாரித்த நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வு கடந்த பிப்ரவரி மாதம் பிறப்பித்த உத்தரவில், " அதிமுக உள்கட்சி விவகாரம் மற்றும் இரட்டை இலை சின்னம் தொடர்பான தேர்தல் ஆணையத்தின் விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்படுகிறது. தேர்தல் சின்னங்கள் ஒதுக்கீட்டு விதிகளின் அடிப்படையில் தேர்தல் ஆணையம் இதுதொடர்பான விசாரணையை தொடரலாம். ஆனால் இந்த மனுக்களை விசாரிக்க தங்களுக்கு அதிகாரம் உள்ளதா என்பது குறித்து தேர்தல் ஆணையம் முழு திருப்தியடைந்த பிறகே விசாரணையை தொடங்க வேண்டும், எனக்கூறி அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

இந்நிலையில் சென்னை உயர் நீதிமன்றத்தின் இந்த உத்தரவுப்படி தேர்தல் ஆணையம் எதிர்வரும் சட்டப்பேரவை தேர்தலைக் கருத்தில் கொண்டு தனது விசாரணையை துரிதப்படுத்தும் வகையில் காலக்கெடுவை நிர்ணயம் செய்யக்கோரி பழனிசாமி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது.

DINAMALAR
Dated: 04.04.2025

# தேர்தல் கமிஷன் விசாரணையை முடிக்க கோரி பழனிசாமி வழக்கு

**சென்னை, ஏப். 4–**

'அ.தி.மு.க., சின்னம் மற்றும் உட்கட்சி விவகாரம் தொடர்பாக, தேர்தல் கமிஷனில் அளிக்கப்பட்ட புகார்கள் மீது விசாரணையை நடத்தி முடிக்க, உரிய காலக்கெடு நிர்ணயிக்க வேண்டும்' என, சென்னை உயர் நீதிமன்றத்தில் அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமி தரப்பில் வழக்கு தொடரப்பட்டு உள்ளது.

அ.தி.மு.க., பொதுச்செயலராக பழனிசாமியை தேர்ந்தெடுத்தது; கட்சி விதிகளில் திருத்தம் செய்தது தொடர்பாக, கட்சியில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் எம்.பி., ரவீந்திரநாத், முன்னாள் எம்.எல்.ஏ., கே.சி.பழனிசாமி, புகழேந்தி ஆகியோர் தேர்தல் கமிஷனில் புகார் மனு அளித்தனர். அவற்றின் மீது, தேர்தல் கமிஷன் விசாரணை நடத்த தடை விதிக்கக் கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமி மனு தாக்கல் செய்தார்.

அதை விசாரித்த நீதிமன்றம், விசாரணைக்கு தடை விதித்தது.

தடையை நீக்கக் கோரி, ரவீந்திரநாத் உள்ளிட்டோர் தாக்கல் செய்த மனுக்களை, நீதிபதிகள் ஆர். சுப்பிரமணியன், ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வு விசாரித்தது. விசாரணை முடிவில், தடையை நீக்கி உத்தரவிட்டது.

'தேர்தல் சின்னங்கள் ஒதுக்கீடு உத்தரவின்படி, ஒரு அரசியல் கட்சியில் இரு வேறு பிரிவுகள் இருந்தால், எந்தப் பிரிவு உண்மையான கட்சி என்பது குறித்து விசாரிக்க, தேர்தல் கமிஷனுக்கு அதிகாரம் வழங்கப்பட்டு உள்ளது. எனவே, இது குறித்து விசாரிக்கலாம்' என, நீதிபதிகள் தங்கள் உத்தரவில் குறிப்பிட்டிருந்தனர்.

இந்நிலையில், சென்னை உயர் நீதிமன்றத்தில் பழனிசாமி புதிதாக மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார். அதில், 'அடுத்த ஆண்டு நடக்க உள்ள சட்டசபை தேர்தலுக்கு தயாராக வேண்டி உள்ளது.

'எனவே, உயர் நீதிமன்ற உத்தரவுபடி, தேர்தல் கமிஷன் விசாரணையை நடத்தி முடிக்க, உரிய காலக்கெடு நிர்ணயிக்க வேண்டும்' என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மனு விரைவில் விசாரணைக்கு வர உள்ளது.

DAILY THANTHI
Dated: 04.04.2023

தேர்தல் கமிஷன்

# அ.தி.மு.க. சின்னம் குறித்து 4 வாரத்துக்குள் விசாரணையை முடிக்க வேண்டும்

## ஐகோர்ட்டில் எடப்பாடி பழனிசாமி மனு

சென்னை, ஏப்.4– தேர்தல் நெருங்குவதால் அ.தி.மு.க. சின்னம் உள்ளிட்ட விவகாரம் தொடர்பான புகாரை 4 வாரத்துக்குள் விசாரித்து முடிக்க இந்திய தேர்தல் கமிஷனுக்கு உத்தரவிடக்கோரி சென்னை ஐகோர்ட்டில் எடப்பாடி பழனிசாமி மனு தாக்கல் செய்துள்ளார்.

### சின்னம்

அ.தி.மு.க. உள்கட்சி விவகாரம் தொடர்பாக நீதிமன்றங்களில் தொடரப்பட்டுள்ள உரிமையியல் வழக்குகளில் இறுதி முடிவு காணப்படும் வரை இரட்டை இலை சின்னத்தை முடக்கி வைக்க தேர்தல் கமிஷனுக்கு உத்தரவிடக்கோரி திண்டுக்கல்லைச் சேர்ந்த சூரியமூர்த்தி என்பவர் சென்னை ஐகோர்ட்டில் ஏற்கனவே வழக்கு தொடர்ந்திருந்தார்.

அந்த வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு, "சூரியமூர்த்தியின் மனு மீது தேர்தல் கமிஷன் 4 வாரங்களில் முடிவெடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டது. இதை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் எடப்பாடி பழனிசாமி வழக்கு தொடர்ந்தார். அதில், அ.தி.மு.க., உள்கட்சி விவகாரம் தொடர்பாக தேர்தல் கமிஷனத்தில் வேறு சிலர் அளித்த மனுக்கள் மீதான விசாரணையை மேற்கொள்ள தடை விதிக்கவேண்டும் என்று கூறியிருந்தார்.

### அதிகாரம் உள்ளதா?

இந்த மனுவை விசாரித்த ஐகோர்ட்டு, தேர்தல் கமிஷனுக்கு தடை விதித்தது. இந்த தடையை நீக்கக்கோரி முன்னாள் எம்.பி.யுமான ரவீந்திரநாத், பெங்களூரு வா.புகழேந்தி, கே.சி.பழனிச்சாமி உள்ளிட்ட 6 பேர் ஐகோர்ட்டில் மனுத்தாக்கல் செய்திருந்தனர். இந்த மனுக்களை விசாரித்த நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், ஜி.அருள்முருகன் ஆகியோர் கடந்த பிப்ரவரி மாதம் உத்தரவு பிறப்பித்தனர்.

அதில், "அ.தி.மு.க. உள்கட்சி விவகாரம் மற்றும் இரட்டை இலை சின்னம் தொடர்பான தேர்தல் கமிஷனத்தின் விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்படுகிறது. தேர்தல் சின்னங்கள் ஒதுக்கீட்டு விதிகளின் அடிப்படையில் தேர்தல் கமிஷன் இதுதொடர்பான விசாரணையை தொடரலாம்" என்று கூறியிருந்தனர்.

### தேவையற்ற வதந்தி

இந்த நிலையில், சென்னை ஐகோர்ட்டில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளார். அதில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாடு சட்டசபைக்கு தேர்தல் நெருங்கி வருகிறது. இந்த தேர்தலை எதிர்கொள்ள எங்கள் கட்சி தயாராகி வருகிறது. எனவே, எங்கள் கட்சி விவகாரம் குறித்து இந்திய தேர்தல் கமிஷன் விசாரணையை நிலுவையில் வைத்திருப்பது தேவையற்றது. அவ்வாறு நிலுவையில் இருந்தால், கட்சி குறித்து தேவையற்ற வதந்திகளை பரப்ப வாய்ப்பு உள்ளது.

அ.தி.மு.க.வுக்கு விரோதமானவர்களும் இதன்மூலம் லாபம் அடைய முயற்சிப்பார்கள். சாதிக் அலி வழக்கில், சின்னம் தொடர்பான விசாரணையை விரைவாக தேர்தல் கமிஷன் மேற்கொள்ள வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு அளித்துள்ளது.

### 4 வாரம்

அதன்படி, எங்கள் கட்சி விவகாரம் தொடர்பான விசாரணையை தேர்தல் கமிஷன் நிலுவையில் வைத்திருக்க முடியாது. அதுமட்டுமல்ல, இந்த ஐகோர்ட்டில் நடந்த விசாரணையில் கூட, அ.தி.மு.க. சின்னம் தொடர்பான புகாரை 4 வாரத்துக்குள் விசாரித்து முடிக்கப்படும் என்று தேர்தல் கமிஷன் உத்தரவாதம் அளித்துள்ளது.

எனவே, அ.தி.மு.க. சின்னம் உள்ளிட்டவை தொடர்பான விசாரணையை 4 வாரத்துக்குள் முடிக்க தேர்தல் கமிஷனுக்கு உத்தரவிட வேண்டும். இல்லையென்றால், எங்களுக்கு மிகப்பெரிய பாதிப்பு ஏற்படும்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது.

DINAKARAN

Dated: 04.04.2025

அதிமுக உட்கட்சி பிரச்னை, இரட்டை இலை சின்னம் தொடர்பான

# தேர்தல் ஆணைய விசாரணையை விரைந்து முடிக்க கோரி வழக்கு

## உயர் நீதிமன்றத்தில் எடப்பாடி மனு தாக்கல்

சென்னை, ஏப். 4: அதிமுக பொதுச்செயலாளர் பதவி, இரட்டை இலை சின்னம் உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பான வழக்கை தேர்தல் ஆணையம் விரைந்து முடிக்க கோரி எடப்பாடி பழனிசாமி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

அதிமுக பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமியை தேர்ந்தெடுத்தது உள்ளிட்ட அதிமுக பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஏற்கக் கூடாது. உரிமையியல் வழக்குகள் முடிவுக்கு வரும் வரை கட்சிக்கு இரட்டை இலை சின்னம் ஒதுக்க கூடாது என்று கோரி தேர்தல் ஆணையத்திடம் கொடுக்கப்பட்ட மனுக்களை தேர்தல் ஆணையம் விசாரிக்க தடை விதிக்க கோரி அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்திருந்தார். இந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், தேர்தல் ஆணைய விசாரணைக்கு தடை விதித்து உத்தரவிட்டிருந்தது. இந்த தடையை நீக்கக்கோரி முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தின் மகனும் முன்னாள் எம்.பி.யுமான ரவீந்திரநாத், பெங்களூரு புகழேந்தி, கே.சி.பழனிச்சாமி உள்ளிட்ட 6 பேர் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்களை விசாரித்த நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன் மற்றும் ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வு தேர்தல் ஆணையம் விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்படுகிறது. தேர்தல் ஆணையம், சின்ன ஒதுக்கீட்டு விதிகளின் அடிப்படையில் விசாரணையை தொடரலாம். மனுக்களை விசாரிக்க அதிகாரம் உள்ளதா என்பது குறித்து தேர்தல் ஆணையம் திருப்தியடைந்த பிறகே விசாரணையை தொடங்க வேண்டும். எனவே, தேர்தல் ஆணைய விசாரணைக்கு தடை விதிக்கக்கோரி எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என்று உத்தரவிட்டனர். இந்த நிலையில், தேர்தல் ஆணையத்தின் விசாரணையை விரைந்து முடிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்ட காலத்திற்குள் விசாரணையை முடிக்க வேண்டும் என்றும் கோரி எடப்பாடி பழனிசாமி தரப்பில் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.